1995 மார்ச் 15]

சின்னசாமியாக இருந்தாலும், காரியம் நிறைவேற்றுவதில் பெரியசாமியான அண்ணார் அவர்களை, தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். *(சிரிப்பு)*

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் என்ன ஐஸ் வைத்தாலும் நிச்சயமாக காரியம் சட்டத்திற்கு விரோதமாக நடைபெறாது. *(சிரிப்பு)* நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கருணையின் காரணமாக கரும்பு விவசாயிகளுக்கு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிக விலையை சென்ற ஆண்டு கொடுத்தோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த ஆண்டும் கொடுத்திருக்கிறோம். சென்ற ஆண்டு அதிக விலை கொடுத்த காரணத்தினாலே ஏராளமான பேர் கரும்பைப் பயிரிட்டு விட்டார்கள். இந்த ஆண்டு மாத்திரம் 18 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இருக்கக்கூடிய கணக்குக்கு பதிலாக 11 இலட்சம் டன் கரும்பு அதிகமாக இருக்கிறது. காரணம், நல்ல விலை கொடுத்த காரணத்தாலேதான். ஆகவே, அதிகமாக கரும்பு இருக்கிற காரணத்தாலே, தனியார் ஆலை முதலாளிகளிடத்திலே கரும்பை எடுத்துக்கொள்ளச் சொல்லி கேட்டு இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், வழக்கத்திற்கு மாறாக, இந்த ஆண்டு 3 மாத காலத்திற்கு எல்லா சர்க்கரை ஆலைகளுடைய அரவைப் பருவத்தை நீட்டித்து எல்லா கரும்புகளையும் வெட்டி எடுத்து சர்க்கரையாக ஆக்குவதற்கு நிச்சயமாக முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். அப்போது மோகனூர் சர்க்கரை ஆலைப் பகுதியிலே இருக்கிற எல்லா கரும்புகளும் எடுத்துக் கொள்ளப்படும் என்று நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

14—

திருப்பூரில் தொழிற்சாலை மேம்பாட்டிற்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டம்

26528—**திரு. வெ. பழனிசாமி:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழிற்சாலை அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தில் ஆய்வில் உள்ள திருப்பூர் நகர அடிப்படை வசதி திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

(இ) அத்திட்டத்திற்கு மத்திய அரசின் உதவி கோரப்படுமா?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பம்பாயிலுள்ள அடிப்படை வசதிகள் வாடகை மற்றும் நிதியுதவி நிறுவனம், (Infrastructural Leasing and Financial Services) ஆய்வு செய்து அளித்த சாத்தியக்கூறு அறிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம், (TACID) ரூபாய் 653.20 கோடி செலவில் திருப்பூர் நகருக்கு சாலைகள், குடிநீர் வடிகால், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நவீன தொலைத் தொடர்பு ஆகிய அடிப்படை வசதிகளோடு திட்டத்தைத் தயாரித்துள்ளது. இந்தத் திட்டத்தைத் துரிதமாகச் செயல்படுத்த, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் என்ற புது நிறுவனம் 24-2-1995 அன்று அமைக்கப்பட்டுள்ளது. "டேசிட்" நிறுவனம் இந்தப் பெருந்திட்டத்தை நிறைவேற்றும் அனுபவம், நிதி வசதி ஆகிய தகுதிகள் கொண்ட 40 பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெற்றுள்ளது. இவைகளில் இத்திட்டத்தை மிகச்சிறந்த முறையில் செய்து முடிக்கும் தகுதி படைத்த பன்னாட்டு நிறுவனம் ஒன்றை விரைவில் தெரிவு செய்து பணிகள் துவக்கப்பட உள்ளன.

(ஆ) இத்திட்டம் மூன்றாண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும்.

(இ) மத்திய அரசிடமிருந்து ரூபாய் முப்பது கோடி பங்கு மூலதனமாகக் கோரப்பட்டுள்ளது.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற திருப்பூர் நகரத்திற்குத் தமிழ நாடு தொழிற்சாலை அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆய்வின் மூலமாகத் திருப்பூர் நகரத்தினுடைய அடிப்படை வசதியை 653.3 கோடி அடிப்படையில் பணிகளை மேற்கொள்வதற்கு முயற்சியை மேற்கொண்ட எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி

1995 மார்ச் 15]

அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, கடந்தமுறை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அவர்கள் மத்தியத் திட்டக் குழுவைச் சந்திக்கின்ற நேரத்தில் திருப்பூர் நகரத்திற்காகச் சிறப்பு நிதி பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டதற்காக அவர்களுக்குத் தொகுதி மக்களின் சார்பில் எங்களது நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, மத்திய அரசு அன்னியச் செலாவணியை அதிகம் கையிருப்பிலே வைத்துக் கொண்டிருக்கிறது என்று பெருமையோடு சொல்லப்படுகிறது. அந்த அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற திருப்பூர், சிவகாசி, இராணிப்பேட்டை போன்ற பகுதிகளுக்குச் சிறப்பு மானியமாகக் கொடுப்பதற்கான வகையில் அரசு வலியுறுத்துமா? காரணம், அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற அந்தப் பனியன் விற்பனை வரி சம்பந்தமாக நாம் விதிவிலக்கு அளித்திருக்கிறோம். ஆகவே, அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற நகரங்களுக்குச் சிறப்பு வசதிசெய்து கொடுப்பதற்கு மத்திய அரசு கடமைப்பட்டிருக்கிறது. மீண்டும் அதை வற்புறுத்தி நிரந்தரமாக ஆண்டுக்காண்டு இதுபோன்ற அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற பகுதிகளுக்கு, அடிப்படை வசதிக்கு நிதியாதாரத்தை மத்திய அரசு கொடுப்பதற்குண்டான முயற்சியில் ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேயே 1,200 கோடி ரூபாய் அளவிற்கு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற நகரம் திருப்பூர் நகரம் என்கின்ற காரணத்தினாலேதான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு புதிதாக அமைக்கப்பட்ட 'டேசிட்' நிறுவனத்தின் மூலம் இந்தத் திருப்பூர் நகரை மேம்படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற நகரமாக இருக்கிற காரணத்தாலே மத்திய அரசு இதற்கு நிதியுதவி செய்தால் இதுவொரு முன்மாதிரியாக இருக்கும். இந்தத் திருப்பூர் நகரத்தினுடைய மேம்பாட்டுப் பணியை நிறைவேற்றுகின்றபொழுது இந்தியாவிலேயே இதுவொரு முன்மாதிரியான திட்டம் என்றுதான் தமிழக அரசு மாண்புமிகு முதலமைச்சருடைய மேலான ஆலோசனையின் பேரில் இந்தப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மத்திய அரசைப் பொறுத்தவரையில் நாம் 30 கோடி ரூபாய் பங்கு மூலதனமாகக் கேட்டிருக்கிறோம். அதில் 10 கோடியைப் பங்கு மூலதனத்திற்கும், 20

கோடியை-சாஃப்ட் லோன் - மென் கடனாகவும் கேட்டிருக்கிறோம். இருந்தபோதிலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய மேலான ஆலோசனையை ஏற்று, மானியத்தை - இந்த 30 கோடியை - மத்திய அரசு தர வேண்டுமென்று அரசின் சார்பில் வலியுறுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசின் மூலமாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதற்காக நன்றி. நான் கூறுவது, அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற திருப்பூர், சிவகாசி, இராணிப்பேட்டை போன்ற பகுதிகளுக்கு-- அன்னியச் செலாவணி கையிருப்பு இல்லாமல் தங்கத்தை அடகு வைத்த நிகழ்ச்சிகளையெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம்; அவ்வளவு சிறப்புக்குரிய அன்னியச் செலாவணியை ஈட்டித்தருகிற இந்த நகரங்களுக்கு-- தொடர்ந்து மத்திய அரசு ஆண்டுக்காண்டு சிறப்பு நிதி கொடுப்பதற்கு அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வலியுறுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

15—

MAINTAINING OF RATIO BETWEEN TEACHING AND NON-TEACHING STAFF

*36759--**Dr. BEATRIX D' SOUZA:**

Will the Hon. the Minister for Education be pleased to state--

(a) Whether the Government maintains the ratio between teaching and non-teaching staff as recommended by the U.G.C.

(b) What is the actual ratio in city colleges?